இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 268 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – சித்திரை 27 – ஞாயிற்றுக்கிழமை 10 மே 2026 – மதுரை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 268 : Thiruvalluvar Year - 2057 - Chithirai 27 - Sunday 10 May 2026 - Madurai 8 Pages ₹ 5.00


## தாமதம் ஏற்படுவது தவிர்க்கப்பட வேண்டும்!

# புதிய அரசு அமைய வேண்டியது காலத்தின் கட்டாயம்!

## தமிழ்நாடு ஆளுநருக்கு – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

சென்னை, மே 10 -

**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், புதிய அரசு அமைய வேண்டியது காலத்தின் கட்டாயம் என்றும், தாமதம் ஏற்படுவது தவிர்க்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.**

தமிழ்நாட்டில் கடந்த மாதம் 23-ஆம் தேதி சட்டமன்றத்திற்கு தேர்தல் நடைபெற்றது. தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியும், எடப்பாடி பழனிசாமி தலைமையிலான என்.டி.ஏ. அணியும் மற்றும் ஜோசப் விஜயின் த.வெ.க.வும், சீமானின் நாம் தமிழர் கட்சியும் என நான்கு முனைப் போட்டியாக சட்டமன்றத் தேர்தல் நடைபெற்றது.

நடந்து முடிந்த தேர்தலின் வாக்குகள் இம்மாதம் 4-ஆம் தேதி எண்ணப்பட்டன. இதில் விஜய் கட்சி 108 இடங்களில் வெற்றி பெற்று அதிக இடங்களைப் பெற்ற கட்சியாக இருந்தது. ஆனாலும் அக்கட்சிக்கு அறுதி பெரும்பான்மை (118) கிடைக்காத காரணத்தால் ஆட்சி அமைக்க முடியவில்லை.

அதிக இடங்களில் வென்ற கட்சி என்ற முறையில் ஆட்சி அமைக்க தம்மை அனுமதிக்க வேண்டும் என்றும், சட்டமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்கிறேன் என்றும் குறிப்பிட்டு, ஜோசப் விஜய் தமிழ்நாடு ஆளுநர் அர்லேகரை சந்தித்து கடிதம் கொடுத்தார்.

கடிதத்தைப் பெற்றுக்கொண்ட ஆளுநர், மெஜாரிட்டியான 118 தொகுதிகளில் வெற்றி பெற்ற வேட்பாளர்களுடன் பட்டியல் கொடுத்தால்தான் ஆட்சி அமைக்க அழைக்க முடியும் என்று விஜயை மறுநாள் நேரில் அழைத்து தெரிவித்தார்.

இதற்கிடையே வேறு சில கட்சிகளின் ஆதரவும் தமக்கு உள்ளதாக விஜய் மீண்டும் தெரிவித்து அதற்கான பட்டியலையும் நேற்று முன்தினம் வழங்கினார்.

மெஜாரிட்டி இல்லாவிட்டாலும் அதிக தொகுதிகளில் வெற்றி பெற்ற கட்சியை ஆட்சி அமைக்க அழைத்து, சட்டமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க அனுமதிக்க வேண்டும் என்று பலரும் ஆளுநருக்கு வலியுறுத்தி இருந்தனர்.

ஆனாலும் நேற்று முன்தினம் இரவு



வரை ஆட்சி அமைப்பது தொடர்பாக எவ்வித அறிவிப்பும் ஆளுநர் தரப்பிலிருந்து வரவில்லை.

விஜய் ஆட்சி அமைக்க தி.மு.க. குறுக்கே நிற்காது என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களும் பேட்டி ஒன்றில் குறிப்பிட்டிருந்தார்.

தமிழ்நாடு ஆளுநர், ஆட்சி அமைப்பதில் தாமதம் ஏற்படுத்துவதையடுத்து, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புதிய ஆட்சி அமைக்க ஆளுநர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி உள்ளார்.

இது குறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில்,

**தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் வெளியாகி, மக்களால் தேர்வு செய்யப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களின் பட்டியலைத் தேர்தல் ஆணையம் வெளியிட்டு விட்டது. ஏற்கனவே இருந்த சட்டமன்றத்தையும் கலைத்து ஆளுநர் அவர்கள் ஆணையும் பிறப்பித்து விட்டார்.**

**இப்படியொரு நிலையில், தேர்தலில் வென்ற சட்டமன்ற உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்வதற்கும், மாநிலத்தின் நலனை முன்னெடுத்துச் செல்வதற்கும் புதிய அரசு அமைய வேண்டியது காலத்தின் கட்டாயம் மட்டுமல்ல, ஜனநாயகத்தின் மிக முக்கியப் பணி!**

**இந்தச் சூழ்நிலையில் அரசு அமைவதில் தாமதம் ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு, அரசியல் சட்டப்படி, புதிய ஆட்சி அமைப்பதற்குரிய நடவடிக்கைகளை ஆளுநர் அவர்கள் உடனடியாக எடுத்திட வேண்டும் என திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

### பிளஸ் 2 பொதுத்தேர்வு!

## சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் 92.96 சதவீதம் தேர்ச்சி!

*சென்னை, மே 10 -*

*சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பிளஸ் 2 பொதுத்தேர்வு எழுதிய மாணவ, மாணவியரில், 92.96 சதவீதம் பேர் தேர்ச்சி பெற்று, சாதனை படைத்துள்ளனர்.*

*இது, கடந்தாண்டு தேர்ச்சி விகிதமான, 88.12 சதவீதத்தை விட, 4.84 சதவீதம் கூடுதல். மாநகராட்சி பள்ளி அளவில், சலவை தொழிலாளி மகள் 593 மதிப்பெண்களுடன் முதலிடம் பெற்று அசத்தியுள்ளார்.*

*சென்னை மாநகராட்சி கட்டுப்பாட்டில் 400க்கும் மேற்பட்ட பள்ளிகள் உள்ளன. இதில், 281 பள்ளிகளைச் சேர்ந்த 2,257 மாணவர்கள், 2,922 மாணவியர் என, மொத்தம் 5,179 பேர், கடந்த மார்ச் 2 முதல் 26ம் தேதி வரை, அரசு பொதுத் தேர்வு எழுதினர். தேர்வு முடிவு, நேற்று முன்தினம் வெளியானது. இதில், மாநகராட்சி பள்ளிகளில் தேர்வு எழுதிய மாணவர்கள் 2,028; மாணவியர் 2,750 என, 4,778 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். இது, 92.26 சதவீதம். கடந்தாண்டு தேர்ச்சி சதவீதம் 88.12 என இருந்தது. இந்தாண்டு 4.84 சதவீதம் கூடுதலாக பெற்று, மாநகராட்சி பள்ளிகள் அசத்தியுள்ளன.*

*இதுகுறித்து, மாநகராட்சி அதிகாரிகள் கூறியதாவது: -*

*பிளஸ் 2 பொதுத்தேர்வில், கடந்தாண்டை விட மாணவர்கள் அதிகளவில் தேர்ச்சி பெற்றுள்ளனர். தேர்ச்சி சதவீதம் 92.96 என்ற அளவில் உள்ளது.*

**100 சதவீதம் தேர்ச்சி!**

*நுங்கம்பாக்கம் சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளி, சி.ஐ.டி., நகர் சென்னை மேல்நிலைப் பள்ளிகள், 100 சதவீதம் தேர்ச்சி அடைந்துள்ளன. மாநகராட்சி பள்ளி மாணவ மாணவியர் 43 பேர், 551-600 வரை மதிப்பெண் பெற்றுள்ளனர்.*

*அதேபோல், 241 மாணவ, மாணவியர் 501 -550 வரையும்; 543 மாணவ, மாணவியர், 451-500 வரையும் மதிப்பெண்கள் பெற்றுள்ளனர்.*

*மேலும், கணினி பயன்பாடுகள் 8; கணினி அறிவியல் 10; கணக்குப் பதிவியல் 8; பொருளாதாரம் 2; வணிகக் கணிதம் 2; அடிப்படை இயந்திர பொறியியல் 2; உணவு சேவை மேலாண்மை 90; நெசவு ஆடை வடிவமைப்பு 4; தணிக்கையியல் 47 என, மொத்தம் 173 மாணவ, மாணவியர் 100க்கு, 100 மதிப்பெண்கள் பெற்றுள்ளனர்.*

*மதிப்பெண் பொறுத்த வரையில், அமைந்தகரை புல்லா அவென்யூ சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி மைதிலி 600க்கு 593 மதிப்பெண் பெற்றுள்ளார்.*

*இவ்வாறு அவர்கள் கூறினர்.*

*'கஷ்டப்பட்டு படித்தால் வெற்றி நிச்சயம்' என்பதை நிரூபிக்கும் வகையில், சலவை தொழிலாளியின் மகளான மைதிலி, மாநகராட்சி பள்ளிகளிலேயே முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளார்.*

*அமைந்தகரை பி.பி., கார்டன் பகுதியைச் சேர்ந்த, சலவை தொழிலாளி ஆனந்தகுமார் - சிவபாரதி தம்பதியின் மகள், மாணவி மைதிலி கூறியதாவது:*

*நான், 6ம் வகுப்பு முதல் இந்த பள்ளியில் தான் படித்து வருகிறேன். 10ம் வகுப்பில் 484 மதிப்பெண்; பிளஸ் 1 தேர்வில் 590 மதிப்பெண் பெற்று மாநகராட்சி அளவில் முதலிடம் பெற்றேன்.*

*பிளஸ் 2 தேர்விலும் சாதித்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. எந்த டியூஷனுக்கும் போகவில்லை. தினமும் பள்ளியில் மாலை 06:30 மணி வரை நடந்த சிறப்பு வகுப்புகளில் மட்டுமே படித்தேன். ஆசிரியர்களின் வழிகாட்டுதலும், பெற்றோர், நண்பர்களின் ஊக்கமும் தான் என் வெற்றிக்கு காரணம். எதிர்காலத்தில் சி.ஏ., படிக்க வேண்டும் என்பது என் கனவு.*

*இவ்வாறு அவர் கூறினார்.*

---

## தேர்தல் ஆணையத்தின் "எஸ்.ஐ.ஆர்." முறைகேடுகளுக்கு எதிர்ப்பு!

### எஸ்.ஐ.ஆர். தீர்ப்பாய நீதிபதி டி.எஸ்.சிவஞானம் ராஜினாமா!

*புதுடெல்லி, மே 10-*

*தேர்தல் ஆணையத்தின் S.I.R. முறைகேடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து, S.I.R. தீர்ப்பாய நீதிபதி டி.எஸ். சிவஞானம், தனது பதவியை ராஜினாமா செய்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.*

*மேற்கு வங்க மாநிலத்தில் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிட்டபோது, 90 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டனர். இதனை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில், நிராகரிக்கப்பட்ட வாக்காளர்கள் மேல்முறையீடு செய்ய ஏதுவாக, 19 தீர்ப்பாயங்களை உச்சநீதிமன்றம் அமைத்தது.*

*இதனிடையே, எஸ்.ஐ.ஆர். தொடர்பான தீர்ப்பாய நீதிபதியாக நியமிக்கப்பட்ட ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி டி.எஸ். சிவஞானம், கொல்கத்தா மற்றும் 24 வடக்கு பர்கானாஸ் மாவட்டங்களில் உள்ள தொகுதிகளின் வாக்காளர்கள் மனுக்களை பரிசீலித்து வந்தார்.*

*நீதிபதி சிவஞானம் ஆயிரத்து 717 மனுக்களை ஆய்வு செய்து அவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என பரிந்துரை செய்திருந்தார்.*

*ஆனால் தேர்தல் ஆணையம் ஆயிரத்து 607 பெயர்களை மட்டுமே வாக்காளர் பட்டியலில் சேர்த்தது.*

*இந்த நிலையில், தேர்தல் ஆணையத்தின் செயல்பாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்து, நீதிபதி டி.எஸ்.சிவஞானம் ராஜினாமா செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.*

---

### தமிழ்நாட்டில் ஜனநாயக முறையிலான ஆட்சி!

## தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் கருத்துக்கு வரவேற்பு!

### "த.வெ.க.விற்கு ஆதரவு இல்லை" என்றும் – பேராசிரியர் கே.எம்.காதர் மொகைதீன் அறிக்கை!

சென்னை, மே 10 -

தமிழ்நாட்டில் ஜனநாயக முறையிலான ஆட்சி நிறுவப்படுவதற்கு தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆளுநர் அவர்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோளை இந்திய யூனியன்முஸ்லிம்லீக்முழுமனதோடு வரவேற்கிறது என்றும், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தொடர்கிறது என்றும், அக்கட்சியின் தேசியத் தலைவர் பேராசிரியர் காதர் மொகைதீன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**இது குறித்து பேராசிரியர் காதர் மொகைதீன் அவர்களின் அறிக்கை வருமாறு:**

தமிழகத்தில் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் இடம்பெற்று பாபநாசம், வாணியம்பாடி ஆகிய இரண்டு தொகுதிகளில் முறையே ஏ.எம். ஷாஜ



ஹான், எஸ்.எஸ்.பி. சையத் பாருக் பாஷா ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் ஜனநாயக முறையிலான ஆட்சி நிறுவப்படுவதற்கு தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழக ஆளுநர் அவர்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோளை இந்திய யூனியன் முஸ்லிம் லீக் முழு மனதோடு வரவேற்கிறது.

சட்டமன்றத்தில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கினுடைய இரண்டு உறுப்பினர்களும் மேதகு ஆளுநர் மேற்கொள்ளக் கூடிய அரசு அமைப்புக்கான அனைத்து செயல்பாடுகளுக்கும் துணை நிற்பர் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு பேராசிரியர் கே.எம்.காதர் மொகைதீன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**கழகத் தலைவருடன் சந்திப்பு!**

மேலும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை பேராசிரியர் கே.எம்.காதர் மொகைதீன் நேற்று முன்தினம் சந்தித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தொடர்கிறது என்றும் த.வெ.க.விற்கு ஆதரவில்லை; அது வெறும் வதந்தி என்றும் தெரிவித்துள்ளார்.

**பேட்டி!**

தொடர்ந்து பேராசிரியர் கே.எம்.காதர் மொகைதீன் அவர்கள் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில், தி.மு.க. கூட்டணியில் நேற்றும் இருந்தோம், இன்றும் இருக்கிறோம், நாளையும் இருப்போம் என்று தெரிவித்தார்.